

# <u>தியாகச் செம்மல் என்.ஜி.இராமசாமி அவர்கள் ஒளிமிகு வாழ்க்கை</u>

கைவிலங்கு மாட்டப்படாத கைதியாய், கொடூரமாக ஒடுக்கப்பட்ட கொத்தடிமையாய் இருந்த பஞ்சாலைத் தொழிலாளர்களின் வாழ்வில் நம்பிக்கை நட்சத்திரமாய்த் தோன்றி, கலங்கரை விளக்காய் வழிகாட்டி, விடியலின் சிவப்புச் சூரியனாய் ஒளிர்ந்த தலைவர் தியாகி என்.ஜி.இராமசாமி அவர்கள்.

அவரது அயராத தொண்டால் தொழிலாளர்கள் மனிதர் என்ற மரியாதை பெற்றவர். ஒற்றுமை என்னும் ஊற்றுக்கண்ணைக் கண்டறிந்து உரிமை என்னும் சுவைமிகு நீர் பருகினர்.

தொழிலாளர்களால் என்.ஜி.ஆர் என்று அன்புடன் அழைக்கப்படும் தியாகி என்.ஜி.இராமசாமி அவர்கள் 11-3-1912 அன்று கோவை மாநகர மணிக்கூண்டிற்கு அருகே இருந்த வீட்டில் பிறந்தார். தந்தையார் திரு.கோவிந்தசாமி நாயுடு ஆவார். தாயார் திருமதி.சீத்தம்மாள் ஆவார். இவருடைய முன்னோர் பீளமேட்டில் வாழ்ந்தனர்.

இலண்டன் மிஷன் பள்ளி, செயின்ட் மைக்கேல் உயர்நிலைப்பள்ளி, சர்வஜன உயர்நிலைப்பள்ளி, அரசு கலைக்கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார், 1932 ஆம் ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி தேர்வு எழுதினார்.

1930 ஆம் ஆண்டு காந்தியடிகள் கைது செய்யப்பட்டபொழுது தியாகி என்.ஜி.இராமசாமி அவர்களும் அவருடைய பள்ளித்தோழர்களும் தலைமை தாங்கி மாணவர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர். கைது செய்யப்பட்டனர்.



1932 ஆம் ஆண்டு என்.ஜி.ஆரும் அவர்தம் நண்பர்களும் சேர்ந்து உண்மை உள்ள கழகம் என்னும் அமைப்பினைத் தொடங்கி நாட்டு நடப்புகளைப் பற்றி விவாதித்தனர். ஒழுக்கம் பேணுதலைத் தலையாய கடமையாகக் கொண்டனர்.

1937 ஆம் ஆண்டு கோவை-மலபார் தொழிலாளர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகக் காங்கிரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1937 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 அன்று இலட்சுமி மில் வேலை நிறுத்தம் தொடங்கியது. அக்டோபர் 4-ந் தேதி புலியகுளம் பாதையின் பள்ளத்தருகே முதலாளிகள் ஏவிவிட்டு குண்டர்களால் தாக்கப்பட்டார். பின்னாளில் இந்தியக் குடியரசுத் தலைவராக உயர்ந்த அந்நாள் காங்கிரசு அரசின் தொழிலாளர் அமைச்சராக இருந்த வி.வி.கிரி அவர்களால் உடன்படிக்கை உருவானது.

பின் போனஸ் போராட்டம் தொடங்கியது.

அந்த ஆண்டில் சோசலிஸ்ட் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் துணைத்தலைவர் ஆனார்.

1937 ஆம் ஆண்டு டிசம்பர் 12ம் தேதி என்.ஜி.இராசம் அவர்களின் தலைமையில் கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் உடையாம்பாளையத்தில் அமைக்கப்பட்டது.

காட்டன் மில், இராதாகிருஷ்ணா மில் வேலை நிறுத்தங்களும், உடன்பாடுகளும் ஏற்பட்டன. பங்கஜா மல்லல் வேலை நேரங்களை மாற்றி ஐந்து சிபட் நடைமுறை வந்த போது எதிர்த்துப்போராடி வெற்றி பெற்றார்.



1938ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் தேதி அந்நாளைய உள்ளாட்சித் துணை அமைச்சர் திரு.கோபால் ரெட்டி பீளமேட்டிற்கு வருகை புரிந்தார். முதலாளிகள் மற்றும் தொழிலாளர்கள் தங்கள் சார்பில் வரவேற்பு கொடுத்தனர். அப்போது குண்டர்கள் சிறுபூசலை உருவாக்கி, தலைவர் என்.ஜி.ஆரை மிகக்கடுமையாகத் தாக்கினார். அத்தாக்குதலால் நலிந்த உடல் சீரடைய இரண்டு மாதங்கள் ஆயின.

1938ல் சாதி , சமுக செல்வாக்குகளுககு எதிராக , தொழிலாளர்கள் ஒற்றுமையாக இயங்கச் சமூகச் சீர்திருத்தச்சக்திகளை அமைத்தார். முதல் பஞ்சாலைத் தொழிலாளர் மாநாட்டினை 1938ஆம் ஆண்டு டிசம்பர் 25ம் தேதி சிங்காநல்லூரில் நடத்தினார். திருப்பூர் தொழிலாளர்களின் நெடிய போராட்டத்தினை நடத்தி, 1939 மார்ச் 3ஆம் தேதி வெற்றி பெற்றார்.

உடுமலைப்பேட்டையில் தொழிலாளர் , பொதுமக்கள் திரண்ட கூட்டத்தில் சொற்பொழிவாற்றச் சென்றார். குணடர்களால் திட்டமிட்டுத் தாக்கப்பட்டார். அத்தாக்குதல் அவரை ஊன்றுகோல் இன்றி நடக்க முடியாதபடி செய்துவிட்டது. இக்கொடுஞ்செயல் 1940 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் நாள் நடை பெற்றது.

1940 ஆம் ஆண்டு நடைபெற்ற தனி நபர் சத்தியாகிரதப் போரில் கோவை மாவட்டத்தின் முதல் சத்தியாக்கிரகியாக மகாத்மா காந்தியடிகளால் என்.ஜி.ஆர் தேர்ந்தெடுக்கப்பட்டார். நவம்பர் மாதம் 22ம் தேதி சிங்காநல்லூரில் சத்தியாகிரகம் செய்து ஓராண்டு சிறைத்தண்டனை பெற்றார். முதலில் வேலூரிலும் பின்னர் திருச்சியிலும் சிறை வைக்கப்பட்டார்.



1941 நவம்பர் 6 ஆம் தேதி தண்டனை முடிந்து தலைவர் சிங்காநல்லூர் வந்த போது பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் திரண்டு வரவேற்றனர்.

சிறையில் உடல்நலம் குன்றித்திரும்பிய என்.ஜி.ஆர் . சில நாட்களில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு கொடியவர் கொலைவாளோடு சென்றனர். நவம்பர் 27ந் தேதி வியாழக்கிழமை இரவு 12.00 மணிக்குத் தாக்கப்பட்டார் தெய்வாதீனமாகத் தப்பினார்.

1942 ஆகஸ்ட் திங்கள் 7ஆம் தேதி "வெள்ளையன் வெளியேறு" இயக்கத்தை நாட்டுத்தந்தை காந்தியண்ணல் தொடங்கிய போது தொழிலாளர் தந்தை என்.ஜி.ஆரும் கைது செய்யப்பட்டார்.

உடல்நலம் முற்றிலும் குன்றிப் போய்விட்ட நிலைமையில் அவருடைய மரணத்திற்கான பழி தம்மீது விழுந்திடக்கூடாது என்று எண்ணிய அன்னிய அரசு 1943 ஜனவரி 16 ஆம் தேதி அவரை பரோலில் விடுதலை செய்தது. வேலூரில் இரயிலில் ஏற்றப்பட்டு, கோவை இரயில் நிலையத்தில் யாரும் இல்லாமல் அனாதை போல் இறககிவிடப்பட்டார். பின் சில நாட்களே அவர் உயிர், அந்தச் சிறைக் கொடுமைகளுக்கும், குண்டர்களின் தாக்குதலுக்கும் ஆளான உடலில் தங்க முடிந்தது .

1943 ஆம் ஆண்டு பிப்ரவரி 12ந் தேதி காலை 10.00 மணிக்கு தொழிலாளர் வர்க்கதத்தின் மூச்சுக்காற்று நின்றது. ஆவி பிரிந்தது.